**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் வியாழன் கிழமை,

**இ. ம எண்-299/2022 ல் அ.வ.எண்.353/2019**

1. முருகன்

2.வசந்தா ..... மனுதாரர்/ பிரதிவாதிகள்

/எதிராக/

வீரமணி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் கடந்த 10/11/2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.S.கரிகாலன்**,B.A,.B.L, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.K.ராஜசேகர்**,B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது பிரதிவாதிகள்/மனுதாரர்கள் தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்களை மனுதாரர் தரப்பு இரண்டாம் நிலை ஆவணங்களாக ஏற்க பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது.

**மனு சுருக்கம்:**

2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபிக்க தேவையான மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய தவறிவிட்டதாகவும், தற்போது தான் மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி அசல் ஆவணங்கள் மனுதாரர் வீட்டில் இருந்த பழைய ஆவணங்களுடன் கலந்துவிட்டபடியால், மேற்படி ஆவணத்தை

உரிய காலத்திற்குள் மனுதாரரால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், தற்போது அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>எதிருரை சுருக்கம்</u>:

3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும், மனுதாரர்/2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளதாக தாக்கல் செய்துள்ள நத்தம் நிலவரி தூயசிட்டா முழுக்க முழுக்க பொய்யான ஆவணம் என்றும், அதனை 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 02/09/1999ம் தேதியில் பதிவு செய்யப்படாத கிரய சாசனம் வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்தபோது, அதனை வாதியிடம் கொடுத்துவிட்டார் என்றும், அதனை இவ்வழக்கில் 2வது ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் 1ம பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ள அடங்கல் பதிவேடும், மற்ற ஆவணங்களும் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்போது இவ்வழக்கிற்கு ஏற்றாற்போல் 2ம் பிரதிவாதி தனக்கு தெரிந்த அலுவலகங்களில் பணிபுரியம் நபர்களை வைத்து போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மைத்தன்மையற்றவை என்றும், வேண்டுமென்றே நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் நோக்கத்தோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

6. வழக்கு ஆவணங்களை கண்ணுற்றதில், இம்மனுவை அனுமதிக்க எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை பரிசீலனை செய்தும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டங்களும் ஏற்பட போவதில்லை என்பதாலும், மாறாக இம்மனுவை அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில், பிரதிவாதிகள்/மனுதாரர்களுக்கு அவர் தரப்பு வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதாகிவிடும் என்பதால், மேற்படி ஆவணங்கள் சாட்சியமாக அனுமதிக்கதக்கதா? என்பது வழக்கு விசாரணையின் போது தீர்மானிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின், இன்று (16/03/2023) இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**திருவிடைமருதூர்**

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** -இல்லை

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**